## கூடுதல் மின் கட்டணம்; மின் துறை அமைச்சர் உண்மையை மறைத்து முரண்பட்ட விளக்கங்களை அளிப்பதால் எந்தப் பயனும் இல்லை!

# காவிரி விவகாரத்தில் முதல்வர் விஜய்யின் அமைதி - மக்கள் மத்தியில் அரசிற்கு எதிரான புரட்சியாக வெடிக்கும்!

## முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் – அமைச்சர் நிர்மல்குமாருக்கு பதிலடி!

**சென்னை, ஆக.2-**

**மின் கட்டண உயர்வு புகாரைத் திசை திருப்பும் வகையில் பேசிய மின் துறை அமைச்சர் நிர்மல் குமாருக்கு தி.மு.க. முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் பதிலடி கொடுத்துள்ளார்.**

**மேலும் அவரது பேட்டியில் மின் கட்டண உயர்வு புகார் இல்லை என்றால், மீள் ஆய்வு நடத்த உத்தரவிட்டது ஏன்.? CMD யின் அறிக்கையிலேயே "widespread complaints" என்றுள்ளதே என்றும் தன் இயலாமையை மறைக்க திமுக திட்டங்களின் பெயரை மாற்றுகிறார் என்றும் காவிரி விவகாரத்தில் முதல்வர் விஜயின் அமைதி மக்கள் மத்தியில் அரசிற்கு எதிரான புரட்சியாக வெடிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் அளித்த பேட்டி வருமாறு :-

தமிழ்நாட்டில் தற்போது எழுந்துள்ள மின்கட்டண உயர்வு தொடர்பான புகார்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எங்களது தலைவர் அறிக்கை வெளியிட்டிருந்தார். அதற்கு பதிலளித்த தமிழ்நாடு மின்துறை மற்றும் சட்டத் துறை அமைச்சர் நிர்மல் குமார், கேட்கப்பட்ட கேள்விக்கு நேரடியாக பதிலளிக்காமல், திசைதிருப்பும் வகையில் பேசியுள்ளார்.

கேள்வி கேட்ட நிருபர்களில் ஒருவரே, "என்னுடைய நண்பரின் வீட்டிற்கே கூடுதல் மின் கட்டணம் வந்திருக்கிறது" என்று கூறினார். அதற்குப் பதில் சொல்லாமல், "வாட்ஸ்அப்பில் வந்த செய்தியை வைத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்" என்று அமைச்சர் கூறுகிறார்.

வாட்ஸ்அப்பில் வந்த செய்தியைப் பார்க்கக்கூடாதா? இன்ஸ்டாகிராமில் வந்த செய்தியைத்தான் பார்க்க வேண்டுமா? இன்ஸ்டாகிராமில் வந்தால் நம்பகமானது, வாட்ஸ்அப்பில் வந்தால் நம்பகமற்றதா?

**அருண் ராய்**
**வாட்ஸ்அப் செய்தி!**

என்னிடமும் ஒரு வாட்ஸ்அப் செய்தி இருக்கிறது. அதில் தமிழ்நாடு மின்வாரியத்தின் CMD அருண்ராய், IAS வெளியிட்டுள்ள அறிக்கையில், "In view of widespread complaints regarding high electricity bills during the month of July, Tamil Nadu Electricity Board has decided to conduct a reinspection of high variation in consumption cases through responsible senior officers" என்று தெளிவாகக் கூறியிருக்கிறார்.

இதைப் பார்த்து பேசக்கூடாதா? இதை ஆதாரமாகக் கொண்டு கருத்து சொல்லக்கூடாதா? ஒரு பொறுப்பான அமைச்சர், கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்காமல், எதிர்க்கட்சியினரை குறைத்து மதிப்பிடும் வகையில் பேசுவது சரியல்ல. திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரின் அரசியல் அனுபவம், வயது, வகித்த பதவிகள் ஆகியவற்றை அறிந்த பிறகே அவர் பற்றி கருத்து தெரிவிக்க வேண்டும். இன்று நிர்மல் குமாருக்கு அமைச்சர் பதவி கிடைத்திருக்கிறது. அந்தப் பொறுப்பை சிறப்பாகச் செய்ய வேண்டும்; அதற்கான வாழ்த்துகள். ஆனால், அதை விட்டுவிட்டு எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றி தேவையற்ற விமர்சனங்களில் ஈடுபடுவது பொருத்தமல்ல.

நிர்மல் குமார் பல துறைகளில் கருத்து சொல்லும் "multitalented minister" ஆகவும், அமைச்சரவையின் "mouthpiece minister" ஆகவும் செயல்படுகிறார். ஒரு நாள் மருத்துவம் குறித்து பேசுவார்; மற்றொரு நாள் தச்சு வேலை, பிளம்பிங் போன்றவற்றை தொழிலாகத் தேர்வு செய்யுமாறு ஆலோசனை வழங்குவார்; பிறகு சட்டத்துறையைப் பற்றிப் பேசுவார். ஆனால், தன்னுடைய துறையில் வெளியாகியுள்ள CMDயின் அதிகாரப்பூர்வ அறிக்கையே அவருக்குத் தெரியாமல் பேசுவது வருத்தமளிக்கிறது.

"எந்தப் புகாரும் வரவில்லை" என்று அவர் கூறுகிறார். ஆனால் CMD அறிக்கையில் "widespread complaints" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. புகார்கள் இல்லையென்றால், மீள் ஆய்வு நடத்த உத்தரவிட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது?

**அமைச்சரின்**
**முரண்பாடான நிலை!**

ஒருபுறம் "புகாரே வரவில்லை" என்கிறார்; மறுபுறம் ஆய்வு நடத்த உத்தரவிட்டதாகச் சொல்கிறார். இது



முரண்பாடான நிலைப்பாடு அல்லவா? முதலில் மின்துறை எவ்வாறு இயங்குகிறது, அதில் உள்ள பிரச்சினைகள் என்ன என்பதை ஒரு மாதமாவது, இரண்டு மாதமாவது முழுமையாக ஆய்வு செய்து, அதன் பிறகு பேட்டியளிக்க வேண்டும்.

மின்வெட்டு ஏன் ஏற்படுகிறது என்று கேட்டால், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காரணம் கூறுகிறார். ஒரு நாள் அதிகாரிகளையே குற்றம்சாட்டுகிறார். மற்றொரு நாள் எதிர்க்கட்சியினரே ஃபியூஸ் கேரியர்களை திருடிச் சென்றதாகச் சொல்கிறார். பிறகு பராமரிப்பு பணிகள்தான் காரணம் என்கிறார். இவ்வாறு மாறிமாறி காரணங்களைச் சொல்வதற்குப் பதிலாக, முழுமையான ஆய்வு நடத்தி உண்மையான காரணத்தைக் கண்டறிய வேண்டும்.

**அடிக்கடி மின்வெட்டு!**

மின்துறை என்பது மக்களின் அன்றாட வாழ்க்கையோடு நேரடியாக தொடர்புடைய மிக முக்கியமான துறை. சில நாட்களுக்கு முன் தொழில் முனைவோர்களைச் சந்தித்தபோது, "இப்போது அடிக்கடி மின்வெட்டு ஏற்படுகிறது; எப்போது மின்சாரம் போகும், எப்போது வரும் என்று தெரியவில்லை" என்று அவர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

எனவே, பிறருக்கு அறிவுரை கூறுவது, நையாண்டி செய்வது போன்றவற்றை விடுத்து, மக்களின் பிரச்சினைகளை நேரில் ஆய்வு செய்து, தீர்வு காணும் நடவடிக்கைகளில் அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும்.

CMD வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிக்கையையே அடிப்படையாகக் கொண்டு, "புகார்கள் வந்துள்ளதால் ஆய்வு நடத்துகிறோம்" என்று வெளிப்படையாகச் சொல்லலாம். அதற்கு பதிலாக உண்மையை மறைத்து, முரண்பட்ட விளக்கங்களை அளிப்பதால் எந்தப் பயனும் இல்லை.

மொத்தத்தில், இந்த அரசு பல பிரச்சினைகளை மறைத்து சமாளிக்க முயல்கிறது என்ற எண்ணமே மக்களிடம் உருவாகியுள்ளது. முதலமைச்சர் முதல் அமைச்சர்கள் வரை, பொது மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு நேரடியாக பதில் அளித்து, அவற்றைத் தீர்க்கும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதே நல்லாட்சிக்கான அடையாளமாக இருக்கும்.

தவிர்க்க முடியாத, உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பொதுமக்களின் பிரச்சினைகள் இன்று அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. ஒரு அரசு பொறுப்பேற்று ஆறு மாதங்கள்தான் ஆகிறது என்பதற்காக அதை விமர்சிக்கக் கூடாது என்று கூறுகிறார்கள். நாங்களும் காரணமில்லாமல் விமர்சிக்கவில்லை. ஆனால், ஒவ்வொரு நாளும் மக்களை பாதிக்கும் பிரச்சினைகளைப் பற்றி பேசாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஏனெனில் நாங்களும் ஒரு பொறுப்பான எதிர்க்கட்சி. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களாக, அவர்களின் பிரச்சினைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்வது எங்கள் கடமை.

**அமைச்சரின்**
**நையாண்டி பேச்சு!**

அந்தக் கடமையின் அடிப்படையில்தான் எங்கள் தலைவர் மின்துறை பிரச்சினைகள் குறித்து அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கைக்கு உரிய பதில் அளிக்காமல், தேவையற்ற விமர்சனங்களில் ஈடுபடுவது சரியான அரசியல் அணுகுமுறை அல்ல. அதனால், அமைச்சர் நிர்மல் குமார் இனிமேல் இத்தகைய நையாண்டி பேச்சை தவிர்த்து, மக்களின் கேள்விகளுக்கு நேரடியாக பதிலளிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**செய்தியாளர் கேட்ட கேள்விக்கு பதில் :**

தனது இயலாமையை மறைக்க திட்டங்களின் பெயரை மாற்றி வருகிறார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனைகளை மக்கள் மனதில் இருந்து அழிக்க முடியும் என்று இந்த அரசு நினைக்கிறது. ஆனால் அது சாத்தியமல்ல. தேர்தலில் கிடைத்த வெற்றியை வைத்துக் கொண்டு, தமிழ்நாட்டு மக்களே முழுமையாக தங்களது செயல்பாடுகளுக்கு ஒப்புதல் அளித்துவிட்டார்கள் என்று கருதுவது தவறான எண்ணம்.

அதனால்தான் இன்று திட்டங்களின் பெயர்களை மாற்றுவது,

## மின் கட்டண உயர்வு புகார் இல்லை என்றால் மீள் ஆய்வு நடத்த உத்தரவிட்டது ஏன்?

நிறங்களை மாற்றுவது போன்ற நடவடிக்கைகளில் அரசு அதிக கவனம் செலுத்துகிறது. முதலமைச்சர் காலை உணவுத் திட்டம், தாயுமானவர் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களின் பெயர்களை மாற்றுவதன் மூலம், அவற்றின் வரலாற்றை மக்கள் மறந்து விடுவார்கள் என்று நினைப்பது தவறாகும். உண்மையில், அந்தத் திட்டங்களைப் பார்த்தாலே முன்னாள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசுதான் மக்களுக்கு நினைவிற்கு வருகிறது.

**இணையதளங்களில்**
**நிறங்கள் மாற்றம்!**

அதேபோல், இணையதளங்களின் நிறங்களை மாற்றுவது, பெயர்களை மாற்றுவது போன்றவை ஒரு நிமிடத்தில் செய்யக்கூடிய வேலைகள். ஆனால் ஆட்சி மாறினால் அவை மீண்டும் மாற்றப்படலாம். மக்கள் மனதில் நிலையான இடத்தைப் பெற வேண்டுமென்றால், பெயர் மாற்றங்களால் அல்ல; மக்கள் நலனுக்காகச் செய்யப்படும் திட்டங்களாலும் செயல்பாடுகளாலும் மட்டுமே முடியும்.

இன்றும் மக்களைக் கேட்டால், காலை உணவுத் திட்டம், மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், உரிமைப் பெண் திட்டம் போன்றவை மு.க. ஸ்டாலின் தலைமையிலான அரசால் கொண்டு வரப்பட்டவை என்று கூறுவார்கள். அதைப் போலவே, தமிழ்நாட்டுக்கு "தமிழ்நாடு" என்ற பெயரை வழங்கியவர் அண்ணா என்பதையும், மாநில முன்னேற்றத்தில் கலைஞர் அவர்களின் பங்களிப்பு என்ன என்பதையும் மக்கள் நினைவில் வைத்திருக்கிறார்கள். வரலாற்றில் பெயர் பெற வேண்டுமென்றால் செயல்களால் பெற வேண்டும்; பெயர் மாற்றங்களாலும், நிறம் மாற்றங்களாலும் அல்ல.

**மேகதாது பிரச்சினையில்**
**முரண்பட்ட கருத்துகள்!**

மின்வெட்டு, மின்கட்டண உயர்வு உள்ளிட்ட பிரச்சினைகளால் பல இடங்களில் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். எதிர்க்கட்சிகள் பொறுப்புடன் நடந்து கொள்கிறார்கள் என்பதையே பலவீனமாகக் கருதி அரசு செயல்படக் கூடாது. மேலும், மேகதாது அணை விவகாரத்தில் அமைச்சர்களே முரண்பட்ட கருத்துகளை வெளியிடுவது அரசின் ஒருங்கிணைப்பின்மையைக் காட்டுகிறது. ஒரு அமைச்சர் ஒரு கருத்தைக் கூற, மற்றொரு அமைச்சர் அதை மறுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

விஜய் அவர்கள் இங்கே வர வேண்டாம் என கர்நாடகா முதல்வர் கூறுகிறார் அப்படி என்றால் இங்கிருந்து யாரவாது முதல்வர் விஜய் அங்கு வர இருப்பதாக தெரிவித்திருக்க வேண்டும் அதனால் தான் தற்போது வர வேண்டாம் என அந்த முதல்வர் கூறுகிறார். இந்த விவகாரத்தில் இப்படி மறைத்து மறைத்து பேச வேண்டிய அவசியம் என்ன.? தவெக கூட்டணி கட்சிகளே அதிருப்தியை வெளிப்படுத்தி உள்ளனர். ஆனால் இப்போதும் கள்ள மவுனம் காத்து வருகிறது இந்த அரசு. எல்லாவற்றிற்கும் அமைதியாக இருப்பதன் மூலம் மக்கள் மத்தியில் பிரச்சினை வெடிக்காது என நினைக்கின்றனர் ஆனால் அந்த அமைதியே ஒருகட்டத்தில் அரசிற்கு எதிராக மக்கள் மத்தியில் பெரும் புரசியாக வெடிக்கும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் சா.சி. சிவசங்கர் பேட்டியளித்தார்.

---

## கச்சா எண்ணெய் உற்பத்தி குறைந்து வருவதால்

# பெட்ரோலியப் பொருட்கள் தடையின்றிக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 2 -

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள், நேற்று முன்தினம் மக்களவையில், நாட்டில் கச்சா எண்ணெய் உற்பத்தி தொடர்ந்து பதினொன்றாவது ஆண்டாகவும், இயற்கை எரிவாயு உற்பத்தி தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகவும் குறைந்து வருவதால், நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு, இறக்குமதி சார்பு, எரிசக்தி விலை நிலைத்தன்மை மற்றும் சர்வதேச எரிசக்திச் சந்தைகளில் ஏற்படும் மாற்றங்களால் உருவாகும் பாதிப்புகளை எதிர்கொள்ள ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை இணை அமைச்சர் சுரேஷ் கோபி அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:-

நாட்டில் கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவின் உள்நாட்டு உற்பத்தி தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதுடன், உள்நாட்டு உற்பத்திக்கும் தேவைக்கும் இடையிலான இடைவெளி மற்றும் வழங்கல்-தேவை நிலையும் தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளில் உள்நாட்டு கச்சா எண்ணெய் உற்பத்தியில் காணப்படும் சிறிய அளவிலான சரிவு, முதிர்ச்சியடைந்த மற்றும் நீண்டகாலமாக உற்பத்தியில் உள்ள எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு வயல்களில்



இயற்கையாக ஏற்படும் உற்பத்திக் குறைவே முக்கிய காரணம் என்றும் அமைச்சர் கூறினார். இருப்பினும், தேசிய எண்ணெய் நிறுவனங்களான ஆயில் அண்ட் நேச்சுரல் கேஸ் கார்ப்பரேஷன் மற்றும் ஆயில் இந்தியா லிமிடெட் ஆகியவை தங்களது உற்பத்தி அளவை நிலை நிறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆயில் அண்ட் நேச்சுரல் கேஸ் கார்ப்பரேஷன் சராசரியாக 19.6 மில்லியன் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் உற்பத்தியைத் தொடர்ந்து பேணியுள்ளதுடன், ஆயில் இந்தியா லிமிடெட் தனது உற்பத்தியை 2.94 மில்லியன் மெட்ரிக் டனிலிருந்து 3.44 மில்லியன் மெட்ரிக் டன்னாக உயர்த்தியுள்ளதாகவும் கூறினார். மேலும், 2014-15 முதல் முதிர்ச்சியடைந்த எண்ணெய் வயல்களில் ஆண்டுதோறும் ஏற்படும்

உற்பத்திக் குறைவு 2 சதவீதத்திற்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது; இது சர்வதேச எரிசக்தி முகமையின் கணக்கீட்டின்படி உலகளாவிய சராசரியான 6 சதவீதத்தை விட குறிப்பிடத்தக்க அளவில் குறைவாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

2021-22 முதல், கிருஷ்ணா-கோதாவரி ஆழ்கடல் பகுதியில் புதிய உற்பத்தி தொடங்கியதன் காரணமாக இயற்கை எரிவாயு உற்பத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டதாகவும், எனினும் கடந்த இரண்டு ஆண்டுகளில் இயற்கை எரிவாயு உற்பத்தி மீண்டும் குறைந்து, 2023-24ஆம் ஆண்டில் 36.438 பில்லியன் கன மீட்டராக இருந்த உற்பத்தி, 2025-26ஆம் ஆண்டில் 34.776 பில்லியன் கன மீட்டராகக் குறைந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**சீர்திருத்தங்களை அரசு**
**செயல்படுத்தி வருகிறது!**

நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை வலுப்படுத்தவும், கச்சா எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு இறக்குமதிச் சார்பைக் குறைக்கவும், உள்நாட்டு ஆய்வு மற்றும் உற்பத்தியை அதிகரிக்கவும், பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் பல்வேறு கொள்கை, ஒழுங்குமுறை மற்றும் நிதிசார் சீர்திருத்தங்களை ஒன்றிய அரசு செயல்படுத்தி வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

எண்ணெய் வயல்கள் ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு திருத்தச் சட்டம், ஆய்வு மற்றும் உற்பத்திக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த கடல் சார் பகுதிகள் மீதான கட்டுப்பாடுகளை நீக்குதல், உற்பத்தி பகிர்வு ஒப்பந்த முறையிலிருந்து வருவாய் பகிர்வு ஒப்பந்த முறைக்கு மாற்றம், நில அதிர்வு ஆய்வுத் தரவுகளைச் சேகரிப்பதிலும் செயலாக்குவதிலும் பெரிய அளவிலான முதலீடுகள் ஆய்வுக் கிணறுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த பத்தாண்டுகளில் 3.5 லட்சம் சதுர கிலோ மீட்டருக்கும் அதிகமான ஆய்வுப் பகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், கண்டறியப்பட்ட சிறிய எண்ணெய் வயல்களை விரைவாக உற்பத்திக்குக் கொண்டுவருதல், ஹைட்ரோகார் பன் ஆய்வு மற்றும் உரிம வழங்கல் கொள்கையை அறிமுகப்படுத்துதல், ஆய்வுப் பணிகளை விரைவு படுத்துதல், சர்வதேச தொழில்நுட்ப நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை விரிவுபடுத்துதல், தேசிய புவியியல் தரவுக் களஞ்சியத்தை உருவாக்குதல் மற்றும் ஹைட்ரோகார்பன் வள மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளும் செயல்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

**கச்சா எண்ணெய்**
**இறக்குமதியை அதிகரிக்க முடிவு!**

நாட்டின் எரிசக்தி பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தவும், வழங்கல் தடைகளின் அபாயத்தை குறைக்கவும், கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்படும் நாடுகளின் எண்ணிக்கை 27 நாடுகளிலிருந்து 41 நாடுகளாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும்,

திரவ இயற்கை எரிவாயு மற்றும் திரவ பெட்ரோலிய எரிவாயு இறக்குமதி 15 நாடுகளுக்கு விரிவு படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இதன் மூலம் குறிப்பிட்ட ஒரு நாடு, பிராந்தியம் அல்லது போக்குவரத்து வழியைச் சார்ந்திருக்கும் நிலை குறைக்கப்பட்டு, வழங்கல் தடைகள் மற்றும் சந்தை ஏற்ற இறக்கங்களை திறம்பட சமாளிக்கும் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

பொதுத்துறை எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனங்கள் மற்றும் பிற தொடர்புடைய அமைப்புகளுடன் இணைந்து உலகளாவிய வழங்கல் நிலைமைகளை ஒன்றிய அரசு தொடர்ந்து மதிப்பீடு செய்து, கச்சா எண்ணெய், திரவ இயற்கை எரிவாயு மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும், இந்திய வியூக பெட்ரோலியக் கையிருப்பு நிறுவனம் என்ற சிறப்பு நோக்க நிறுவனத்தின் மூலம், குறுகிய கால வழங்கல் பாதிப்புகளை சமாளிப்பதற்காக வியூக பெட்ரோலியக் கையிருப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். முதல்கட்டமாக, ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடகாவில் மூன்று இடங்களில் மொத்தம் 5.33 மில்லியன் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கச்சா எண்ணெய் கையிருப்பு வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டத் திட்டத்தின் கீழ், ஒடிசா மற்றும் கர்நாடகாவில் மொத்தம் 6.5 மில்லியன் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேலும் இரண்டு வணிக-வியூக பெட்ரோலியக் கையிருப்பு வசதிகளை அமைக்க ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது என்றும் ஒன்றிய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை இணை அமைச்சர் சுரேஷ் கோபி அவர்கள், தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

---

## எ(த)ந்திரம்...!



மேற்கு வங்கத்தில்
மம்தா
தோற்க வேண்டும்...

கேரளத்தில்
பினராயி விஜயன்
தோற்க வேண்டும்...

தமிழ்நாட்டில்
'கழகங்கள்
இல்லாத
தமிழ்நாடு' எனும்
தங்கள் கனவு
மெய்ப்பட வேண்டும்

அதற்கு
தி.மு.க. – அ.தி.மு.க. இரண்டும்
தோற்க வேண்டும்...

அதேவேளை...

தங்கள் கூட்டணி
ஆட்சி நடக்கும்
பாண்டிச்சேரிக்கு
பாதகம் வரக்கூடாது ...

இந்த அத்தனை
தேவைகளையும்
நிறைவேற்றும்
விதத்தில்
அச்சுப்பிசகாமல்

அவர்களின்
ஆசைக்கு
இணங்குகிறது என்றால்

அது எந்திரமா
தந்திரமா....

இல்லை

எந்திரத்தில்
தந்திரமா...

என்னநாஞ்
சொல்றது



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக்
குழு துணைத் தலைவர்